# EASTERN UNIVERSITY, SRI LANKA
# FACULTY OF COMMERCE & MANAGEMENT
# (EXTERNAL DEGREE PROGRAMME)
# PART II EXAMINATION IN BBA – 1999/2000 (PROPER/REPEAT)
# (APRIL/MAY 2006)

## BBA 306 Monetary Economics

ஏதாவது ஐந்து வினாக்களுக்கு விடை தருக. நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. (அ) பணத்தின் "பெறுமானத்திரட்டு" (Store of value) என்ற தொழிற்பாட்டினை விளக்குக.

(04 புள்ளிகள்)

(ஆ) பணவீக்கமானது மேற்படி தொழிற்பாட்டினை எவ்வாறு பாதிக்கின்றது?

(04 புள்ளிகள்)

(இ) "பணத்திற்கான கேள்வி பற்றிய ரோபினுடைய விளக்கமும் கெயின்சினுடைய விளக்கமும் ஒரே முடிவையே தருகின்றன." ஏற்றுக்கொள்வீரா?

(12 புள்ளிகள்)

02. (அ) பெயரளவுப் பணநிரம்பலையும்(Nominal money supply) மெய்ரீதியான பண நிரம்பலையும் (Real money supply) வேறுபடுத்திக் காட்டுக.

(04 புள்ளிகள்)

(ஆ) மத்திய வங்கி, வணிக வங்கி, பொதுமக்கள் ஆகியோரின் கூட்டுச் செயற்பாடுகள் எங்ஙனம் ஒரு பொருளாதாரத்தின் பண நிரம்பலை தீர்மானிக்கின்றன? சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

(இ) இலங்கையின் பணநிரம்பல் தொடர்பாக பின்வருவனவற்றை விளக்குக.

(i) ஒதுக்குப் பணம் (Reserve money)

(ii) ஒடுங்கிய பணநிரம்பல் ($m_1$)

(iii) விரிந்த பணநிரம்பல் ($m_2$)

(iv) திரட்டப்பட்ட விரிந்த பணநிரம்பல் ($m_2b$)

(08 புள்ளிகள்)

(அ) MV = PT என்ற கணியச் சமன்பாட்டில் இருந்து விளங்கிக் கொள்வது யாது?

(04 புள்ளிகள்)

(ஆ) கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணுக்குப் பதிலீடாக அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண் எவ்வழிகளில் மேம்பட்டு நிற்கின்றது? விளக்குக.

(04 புள்ளிகள்)

(இ) பொருளாதாரத்தில் இடம்பெறும் நிரம்பல் சார்ந்த அதிர்ச்சிகளும் (supply shocks) அதனைத்தொடர்ந்து இடம்பெறும் நாணயம்சார் நடவடிக்கைகளும் (accommodations) எவ்வாறு கூலி-விலைச் சுழற்சிக்கு(wage-price spiral) வழிவகுக்கின்றன.? விளக்குக.

(12 புள்ளிகள்)

(அ) வணிக வங்கிகள் ஏன் "நிதி இடையீட்டாளர்கள் (Financial intermediaries) என்று அழைக்கப்படுகின்றன? அப் பணியின் பொருளாதார முக்கியத்துவத்தை விளக்குக.

(08 புள்ளிகள்)

(ஆ) 1977ம் ஆண்டின் பின்னர் இலங்கையின் வணிக வங்கித்தொழிலில் ஏற்பட்டுவந்த அபிவிருத்திகளை உதாரணங்களுடன் விளக்குக.

(12 புள்ளிகள்)

(அ) ஒரு மத்திய வங்கி எவ்வாறு அரசாங்கத்தின் வங்கியாகத் தொழிற்பட்டுவருகின்றது.

(08 புள்ளிகள்)

(ஆ) ஆரம்ப காலத்தில் இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்கள் எவ்வாறு அமைந்திருந்தன?

(04 புள்ளிகள்)

(இ) 2002ம் ஆண்டின் திருத்தப்பட்ட நாணயவிதிச் சட்டப்படி அதன் குறிக்கோள்கள் எவ்வாறு மாற்றம் கண்டன?

(04 புள்ளிகள்)

(ஈ) இலங்கை மத்திய வங்கியின் பிரதான நாணயக்கொள்கை கருவிகளைத் தருக.

(அ) இலங்கையில் செயற்பட்டுவரும் வங்கிசாரா நிதியியல் நிறுவனங்களை வகைப்படுத்திக் காட்டுக.

(04 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் வங்கிசாரா நிதியியல் நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றி சிறு குறிப்பு தருக.

(i) தேசிய சேமிப்பு வங்கி (NSB)

(ii) ஊழியர் சேமலாப நிதியம் (EPF)

(iii) வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

(08 புள்ளிகள்)

(இ) பின்வரும் நிறுவனங்கள் இலங்கையின் பொருளாதார செயற்பாடுகளுக்கு எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றன?

(i) நிதிக்கம்பனிகள் (Financial Companies)

(ii) வியாபார வங்கிகள் (Merchant banks)

(iii) குத்தகைக் கம்பனிகள் (Leasing companies)

(iv) பணத் தரகர்கள் (Money brokers)

(08 புள்ளிகள்)

(அ) அந்நியச் செலாவணிச் சந்தையை வரையறுக்குக.

(04 புள்ளிகள்)

(ஆ) முன்னோக்கிய நாணயமாற்றுவீதம் என்பதில் இருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது?

(04 புள்ளிகள்)

(இ) பெயரளவு பயன்தரு செலாவணி வீதத்தையும் உண்மைப் பயன்தரு செலாவணி வீதத்தையும் வேறுபடுத்துக.

(04 புள்ளிகள்)

(ஈ) "சென்மதி நிலுவை" என்ற பதத்தை வரையறுக்க. ஒரு நாட்டின் நாணயமாற்றுவீதத்தில் அந்நாட்டின் சென்மதி நிலுவைப் பிரச்சினை எவ்வாறு செல்வாக்குச் செலுத்தமுடியும்? விளக்குக.

(08 புள்ளிகள்)

சுருக்கமாக விளக்குக.

(அ) பணத்திற்கான கொடுக்கல் வாங்கல் நோக்கக் கேள்வி

(ஆ) செலவுத்தூண்டற் பணவீக்கம்

(இ) இலத்திரனியல் பணமும் அதன் நன்மைகளும் (Electronic money and its advantages)

(20 புள்ளிகள்)

*****************